


Registered as a Newspaper

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 121

செவ்வாய்க்கிழமை
26 மார்ச் 2024

பங்குனி 13 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

தாக்குதல் அச்சம்?

# தேவாலயங்களின் பாதுகாப்பை பலப்படுத்துமாறு திடீர் உத்தரவு



## ஆலயத்துக்குக் கொண்டுவரப்படும் பொதிகளையும் சோதனை செய்ய நடவடிக்கை

**கொழும்பு, மார்ச் 26**

**உயிர்த்த ஞாயிறை முன்னிட்டு நாட்டிலுள்ள அனைத்துத் தேவாலயங்களினதும் பாதுகாப்பைப் பலப்படுத்துமாறும், ஆலயத்துக்கு வருபவர்களின் பொதிகளைச் சோதனையிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸ்மா அதிபர் நேற்று திடீர் உத்தரவைப் பிறப்பித்துள்ளார். 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் சூத்திரதாரிகள் மீண்டும் பேசுபொருளாகியுள்ள நிலையில் இந்த அவசர பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளமை பல்வேறு சந்தேகங்களையும் எழுப்பியுள்ளது.**

11

## சி.ஐ.டி.யில் 5 மணிநேரம் மைத்திரி வாக்குமூலம்!

கொழும்பு, மார்ச் 26

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் (சி.ஐ.டி.) ஐந்து மணித்தியாலம் வாக்குமூலம் வழங்கிய பின்னர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பின்வாசல் வழியாக வெளியேறியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக

11



வட்டுக்கோட்டை இளைஞன் கொலை;

## பிரதான சந்தேகநபர் உட்பட 3பேர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 26

வட்டுக்கோட்டை இளைஞனைக் கடத்திப் படுகொலை செய்த குற்றச்சாட்டில் பிரதான சந்தேகநபர்களில் ஒருவர் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காரைநகரிலிருந்து வந்து கொண்டிருந்த இளைஞனையும் அவரது மனைவியையும் பொன்னாலையில் வைத்துக் காரில் கடத்திச் சென்ற கும்பல் இளைஞனைக் கொலை செய்திருந்தது.

11

பெரிய வெங்காயம்

## விலையை குறைக்க நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 26

சித்திரைப் புதுவருட காலத்தில் பெரிய வெங்காயத்தின் விலையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ

11

## கோத்தாவின் ஆணைக்குழு அறிக்கை நீதிமன்றால் நேற்று நிராகரிப்பு

கொழும்பு, மார்ச் 26

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார, கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் பலர் தொடர்பில் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு வழங்கிய அறிக்கை, கண்டு

11

## விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பிச் சென்றது ஹை – ஏஸ்!

பருத்தித்துறை, மார்ச் 26

பருத்தித்துறை – மந்திகை பகுதியில் மோட்டார் சைக்கிளை ஹை – ஏஸ் வாகனம் மோதியதில் படுகாயமடைந்த பெண் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று திங்கட்கிழமை மாலை 5.20 மணி அளவில் மந்திகை இலங்கை வங்கி கிளைக்கு முன்பாக இடம்பெற்ற இவ் விபத்தில் துன்னாலை மேற்க்கைச் சேர்ந்த குமரேசமூர்த்தி வனிதா (வயது-51) என்பவரே படுகாயம்

11

கடந்த வருடத்தில் மட்டும்

## வடக்கு மாகாணத்தில் 52 பேர் படுகொலை

*129 பேர் சந்தேகத்தில் கைது*

யாழ்ப்பாணம், மார்ச் 26

வடக்கு மாகாணத்தில் கடந்த ஆண்டு மாத்திரம் 52 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக கோரப்பட்டதற்கு அமைவாக வழங்கப்பட்டுள்ள பதிலில்

11



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வாட்டி வதைக்கும் வெப்பம்; படையெடுக்கும் ஜந்துக்கள்

## எச்சரிக்கையுடன் செயற்படுமாறு மக்களுக்கு அறிவுறுத்தல்

**கொழும்பு, மார்ச் 26**

**நாட்டில் தற்போது அதிகரித்துள்ள வெப்பம் காரணமாக ஊர்வன மற்றும் நில நீர் வாழ் உயிரினங்கள் வீடுகளை நோக்கிப் படையெடுக்கின்றன என்றும், அவற்றான சந்தர்ப்பங்களில் மக்கள் பீதியடைய வேண்டாம் எனவும் வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.**

தற்போது நிலவும் கடும் வெப்பத்தால், ஊர்வன மற்றும் நில நீர் வாழ் உயிரினங்கள் தங்கள் உடல் வெப்பத்தைக் கட்டுப்படுத்துவது மற்றும் வெப்பத்திலிருந்து தப்பிக்க மனித குடியிருப்புகளை நாடுகின்றன.

அவ்வாறான உயிரினங்களைக் கையாளும்போது மக்கள் எச்சரிக்கையுடன் செயற்படவேண்டும்.

இதன்படி, மனித வாழ்விடங்களுக்கு அருகில் காணப்படும் ஊர்வனவற்றை கையாளும் போது எச்சரிக்கையுடன் இருக்குமாறு வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம் அறிவுறுத்துகிறது.

மக்கள் பதற்றமடைந்து விலங்குகளைக் காயப்படுத்த கூடாது. அவற்றை அடையாளம் கண்டு, கண்காணித்து, சரியான இடத்தைக் கண்டுபிடித்து, அமைதியாக விரட்டுவது தான் சிறந்தது என்று வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சந்தன சூரியபண்டார அறிவுறுத்தியுள்ளார். (எ-இ)

# மன்னாரில் இன்று வெப்பம் உச்சம்!

கொழும்பு, மார்ச் 26

வடமாகாணத்தில் மன்னார் மாவட்டத்தில் இன்று வெப்பநிலை உச்சமாக இருக்கும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில்,

மேல், வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும் அத்துடன் மன்னார், வவுனியா மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களிலும் அதிகரித்த வெப்பநிலை காணப்படும். கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் அத்துடன் பொலநறுவை மாவட்டத்திலும் அவ்வப்போது மழை பெய்யக்கூடும்.

மத்திய, சப்ரகமுவ, மேல் மற்றும் தென் மாகாணங்களின் பல இடங்களில் பிற்பகல் அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் காலி, மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டங்களின் சில இடங்களிலும் காலை வேளையில் பனிமூட்டம் காணப்படும். பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் - என்றார். (ம)

# வேலை வாய்ப்பு மோசடி; ஒருவர் கைது

கொழும்பு, மார்ச் 26

இஸ்ரேலில் வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்று தெரிவித்து தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் மூத்த அதிகாரிகளின் பெயர்களைப் பயன்படுத்திப் பண மோசடி செய்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் தன்னை மருத்துவராக அடையாளப்படுத்தியுள்ளார். சந்தேகநபர், 7 பேரிடம் இருந்து 7 இலட்சத்து 65 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்று மோசடி செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# நிதி மோசடி குற்றச்சாட்டு ஒருவர் கைது

கொழும்பு, மார்ச் 26

ஊழியர் நம்பிக்கை நிதிய பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டில் தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் முன்னாள் பொது முகாமையாளர் குற்றப் புலனாய்வு பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

64 வயதான சந்தேகநபர் ஏழு கோடியே எழுபத்தேழு இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் நிதி மற்றும் வர்த்தக குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (எ-இ)



# அழிந்துவரும் சிட்டுக்குருவி

கடந்த நான்கு தசாப்தங்களாக மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகளின்படி நாட்டின் 18 மாவட்டங்களில் சிட்டுக்குருவிகள் அழிந்துள்ளன என்று சூழலியல் ஆர்வலர் சட்டத்தரணி ஜகத் குணவர்தன தெரிவித்துள்ளார்.

சிட்டுக்குருவியை பாதுகாக்கப்பட்ட பறவையாக அறிவிக்கவேண்டும் என்று 2007ஆம் ஆண்டு சுற்றாடல் அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. தற்போது சிட்டுக்குருவி பாதுகாக்கப்பட்ட பறவையாக கருதப்படுகின்றது.

மலேரியாவைக் கட்டுப்படுத்த மலத்தியான் என்ற இரசாயனத்தைத் தெளிக்க ஆரம்பித்ததில் இருந்து சிட்டுக்குருவியின் அழிவு தொடங்கியது. 1990ஆம் ஆண்டுகளில்கொசுவர்த்தி சுருள்களின் பயன்பாடு அதிகரித்ததால், ஊவா, தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களில் சிட்டுக்குருவிகள் அழிந்தன. இந்த கொசுவர்த்திச் சுருள்களில் உள்ள இரசாயனம் பறவைகளின் பெருக்கத்தில் வலுவான தாக்கத்தை ஏற்படுத்தியது.

புதிதாகக் கட்டப்பட்டுள்ள கட்டடங்களில் சிட்டுக்குருவிகள் வாழ்வதற்கு ஏற்ற சூழல் இல்லாததும் சிட்டுக்குருவிகளின் எண்ணிக்கையில் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லிகள் போன்றவையும் சிட்டுக்குருவிகள் அழிந்து வருவதற்குக் காரணம் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (எ-இ)

# பொலிஸ் அதிகாரிக்கு எதிராக விசாரணை!

பாதாள உலக ஆயுதக் குழுக்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணினார் என்று கூறப்படும் அகலவத்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு எதிராக விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

டுபாயில்தலைமறைவாகியுள்ளபாதாள உலக் குழுவைச் சேர்ந்த தர்மசிறி என்பவருக்கும், அகலவத்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் இடையிலான தொலைபேசி உரையாடல் பதிவு ஒன்று வெளியாகியுள்ள நிலையிலேயே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (எ-இ)

# 862 பேர் கைது

பொலிஸாரால் மேற்கொண்ட 'யுக்திய' நடவடிக்கையின் போது நேற்றுமுன்தினம் நள்ளிரவுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் 862 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 57 சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைக்காக பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் 5 சந்தேகநபர்களின் சொத்துகள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (எ-இ)

# மருந்துத் தட்டுப்பாட்டுக்கு பொறுப்பேற்க முடியாது!

## மருந்துகள் ஒழுங்குமுறை கூட்டுத்தாபனம் கைவிரிப்பு

கொழும்பு, மார்ச் 26

2025 ஆம் ஆண்டுக்கான ஆணைகளை மருத்துவ வழங்கல் பிரிவு வழங்கத் தவறியமையால் ஏற்படக்கூடிய மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்களின் தட்டுப்பாட்டுக்குத் தாங்கள் பொறுப்பல்ல என அரச மருந்துகள் ஒழுங்குமுறைக் கூட்டுத்தாபனம் சுகாதார அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

மருந்துக் கொள்முதல் பணிகளுக்கு சராசரியாக ஒன்பது மாதங்கள் தேவைப்படும் நிலையில், 2025 ஆம் ஆண்டுக்குத் தேவையான மருந்துகள் மற்றும் அறுவை சிகிச்சை உபகரணங்களுக்கான ஆணைகளை மருத்துவ வழங்கல் பிரிவு இந்த ஆண்டு ஜனவரி மாதத்துக்குள் மருந்து ஒழுங்குமுறைக் கூட்டுத்தாபனத்துக்குத் தெரிவிக்கவேண்டும்.

அதேநேரம், 670 மருந்துகள் மற்றும் கிட்டத்தட்ட ஆயிரம் சத்திரசிகிச்சை உபகரணங்களுக்கான ஆணைகள் வழங்கவேண்டியுள்ளபோதும், தரவு அமைப்பில் உள்ள சிக்கல்களால் அவற்றைச் செயற்படுத்த முடியவில்லை என்று மருத்துவ வழங்கல் துறை தெரிவித்துள்ளது. (எ-இ)

# மக்கள் மனதை அறிய ரூ.1000 கோடி செலவு!

பொதுமக்களின் கருத்தை அறிந்துகொள்வதற்காக மூன்று கட்சிகள் ஆய்வு நிறுவனங்களுக்கு ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேல் வழங்கியுள்ளன என்று தகவல் வெளியாகியுள்ளது.

தற்போது நாட்டில் தேர்தல் அலை வீசும் நிலையில், பொதுமக்களின் மனநிலையை அறிந்துகொள்வதற்காக முக்கியமான மூன்று கட்சிகள் ஆய்வு நிறுவனங்களை நாடியுள்ளன என்று கூறப்படுகின்றது.

சில ஆய்வு நிறுவனங்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட பணியை நிறைவு செய்து ஆய்வு அறிக்கைகளை அந்தந்த அரசியல் கட்சிகளிடம் வழங்கியுள்ளன என்றும் தகவல் வெளியாகியுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை வடக்கை உடன் தரமுயர்த்துக

## மீண்டும் போராட்டம்

கொழும்பு, மார்ச் 26

**கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தி, நிர்வாகப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்று வலியுறுத்தி கல்முனை வடக்கு பிரதேச செயலக முன்றிலில் நேற்றுப் போராட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது.**

சிவில் சமூக அமைப்புகளின் ஏற்பாட்டில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இணைந்து இந்தப் போராட்டத்தை நடத்திவருகின்றனர். போராட்டத்தை முன்னிட்டு பிரதேச செயலகத்துக்கு கடும் பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டிருந்தது.

கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துமாறு வலியுறுத்தி, 2019ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட உணவு தவிர்ப்புப் போராட்டம் அரசியல்வாதிகளின் பல்வேறுபட்ட வாக்குறுதிகளையடுத்துக் கைவிடப்படும் நிலை ஏற்பட்டது. எனினும் எந்தவொரு வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை.

இந்த நிலையிலேயே, பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துமாறு வலியுறுத்தி நேற்று மீண்டும் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தீர்வு கிடைக்கும் வரையில் இந்தப் போராட்டம் தொடரும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கல்முனை சுபத்திராம விகாரையின் விகாராதிபதி ரண்முத்துக்கல சங்கரத்ன தேரர், கிழக்கிலங்கை இந்துகுருமார் ஒன்றிய தலைவர் ஸ்ரீஸ்ரீ க.கு.சச்சிதானந்தம் சிவம் குரு உள்ளிட்ட மதத் தலைவர்களும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர். (ம)

## குளங்களைச் சீரமைக்குக

முல்லைத்தீவிலுள்ள ஆரோக்கியபுரம் கிராமம் மற்றும் கிளிநொச்சி அக்கராயன் மேற்குக் கிராமங்கள் வறட்சிக் காலங்களில் கடுமையான நீர் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றன. குளங்களைச் சீரமைப்பதன் ஊடாக தண்ணீர் நெருக்கடியைத் தவிர்க்க முடியும் என்று பிரதேச மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்தக் கிராமங்களைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வறட்சிக் காலத்தில் தண்ணீருக்காக அலையவேண்டிய நிலைமை உள்ளது. அங்குள்ள மணியங்குளத்தையும், பாலங்குளத்தையும்அபிவிருத்திசெய்தால் தண்ணீர்ப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யமுடியும். கடந்த காலங்களிலும் இது தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக அவதானம் செலுத்த வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-13)

## பனை மர குற்றிகளுடன் சிக்கியது வாகனம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

அனுமதி பெறாது பனை மரக் குற்றிகளை ஏற்றிவந்த கப்ரக வாகனம் ஒன்று கைப்பற்றப்பட்டதுடன், சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் இயங்கும் பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினர் கடந்த சனிக்கிழமை இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-20)



## தாமதமாக வரும் பஸ்ஸால் அந்தரிக்கும் மாணவர்கள்!

முல்லைத்தீவு, மார்ச் 26

புதுக்குடியிருப்பில் உள்ள மன்னாகண்டல் கிராமத்தில் இருந்து கற்சிலைமடு மகா வித்தியாலயத்துக்குச் செல்லும் மாணவர்கள் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

இந்தக் கிராமத்தில் இருந்து சுமார் 75 மாணவர்கள் பாடசாலைக்குச் செல்கின்றனர். புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் பஸ், உரிய நேரத்தில் வராததால் பாடசாலை மாணவர்கள் நீண்டநேரம் வீதியில் காத்திருக்கவேண்டியுள்ளது என்று கிராம மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ப-13)

## தாவரங்களுக்குச் சான்றிதழ்

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்பட்டும் தாவர விதைகள், தாவரங்கள் என்பவற்றைப் பரிசோதித்து சான்றிதழ் வழங்கும் பிரிவு யாழ்ப்பாணத்திலுள்ள தபால் நிலையத்துடன் சேர்ந்து இயங்கவுள்ளது.

இதுவரை காலமும் கட்டுநாயக்க விமானநிலையத்தில் மட்டுமே இந்தப் பிரிவு இயங்கிவந்துள்ள நிலையில், தற்போது யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ப-23)

## 50 குளங்களை புனரமைக்க ரூ. 50 மில்லியன் ஒதுக்கீடு!

கிளிநொச்சி, மார்ச் 26

வவுனியாவில் 50 குளங்களைப் புனரமைப்பதற்காக 50 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் இடம்பெற்ற வெள்ளப் பேரிடரால் வவுனியாவில் 94 குளங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. இதையடுத்து அந்தக் குளங்களைச் சீரமைத்துத் தரும்படி விவசாய அமைச்சருக்கு இராஜாங்க அமைச்சர் மஸ்தான் கோரிக்கை விடுத்திருந்தார். எனினும் நிதிப்பற்றாக்குறை காரணமாக அப்போது குளங்களைப் புனரமைக்க முடியவில்லை. இந்த நிலையில் தற்போது 50 குளங்களைப் புனரமைப்புச் செய்வதற்காக 50 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (ம)

## புதினம் தெரியுமோ?

**வே**லியில போற ஓணானைப் பிடிச்சு வேட்டிக்குள்ள விட்டா அந்தரப்படத்தானே வேணும். அப்பிடியொரு நிலைமை கிளிநொச்சியில இருக்கிற பள்ளிக்கூடமொண்டுக்கு நடந்திருக்கு. இத்தனைக்கும் அந்தப் பள்ளிக்கூடம் ரவுணுக்குள்ள இல்லை, ஒரு கிராமத்தில தான் இருக்குது. கிராமத்தில இருந்தாலும் அந்தப் பள்ளிக்கூடம் தேசிய அளவில கபடிக்கு பேமஸ். அந்தப்பள்ளிக்கூடத்து கபடி மகளிர் அணி, தொடர்ச்சியா பத்து வருசமா தேசியமட்டக் கபடிப் போட்டியில கிண்ணம் வெல்லாமல் வந்ததேயில்லை. பிள்ளையளும், பள்ளிக்கூட நிர்வாகமும் நேரகாலம், வெயில்-மழை பார்க்காமல் கஷ்டப்பட்டதால, கபடி போட்டியெண்டாலே கண்ணை மூடிக்கொண்டு கிண்ணம் வெல்லுற அளவுக்கு முன்னேறியிருக்கினம்.

இப்பிடிப்பட்ட அந்தப் பள்ளிக்கூடத்தில கிட்டடியில, விளையாட்டுப்போட்டி நடந்தது. அதுக்கு விருந்தினரா கல்வித்திணைக்களத்தில இருக்கிற ஒரு அதிகாரியை கூப்பிட்டிருக்கினம். அந்த அதிகாரிக்கு வாயில சனி. எங்கபோனாலும் ஏதும் எக்குத்தப்பா கதைக்காமல் அவர் வந்ததில்லை. அதால பிரச்சினையளுக்கும் அவருக்கும் கடும் நல்லுறவு. இப்பிடிப்பட்ட அதிகாரியை விருந்தினராக் கூப்பிட்ட பலனை அண்டைக்கு அந்தப் பள்ளிக்கூடக்காரர் அனுபவிச்சிருக்கினம்.

விளையாட்டில நேர்மை முக்கியம். ஆனால் இந்தப் பள்ளிக்கூடத்தில இருந்து கபடிப் போட்டிக்கு அக்காவுக்குப் பதிலாத் தங்கச்சியும், தங்கச்சிக்குப் பதிலா அக்காவும் ஆள்மாறாட்டம் செய்து விளையாடின வரலாறு இருக்கு. அதால இனிமேலாவது விளையாட்டில நேர்மையா இருக்கப் பழகோணும் எண்டு அந்தாள் வாய்க்கு வந்ததை உளறிக்கொட்டியிருக்குது. இதைக் கேட்டு, கபடி ரீமில இருக்கிற பிள்ளையளுக்கும், அவையின்ர பெற்றோருக்கும் கடுப்பேறிட்டுது. அந்தப் பிள்ளையள் கஷ்டப்பட்டு தேசியத்துக்குப் போய் உயிரைக் குடுத்து விளையாடி வெண்டதை, அந்தாள் 'ஆள்மாறாட்டம் செய்துதான் வெண்டனீங்கள்' எண்டு கேவலப்படுத்தினால் ஆத்திரம் வரத்தானே செய்யும். அதோட கோட்டமட்டப் போட்டியளிலையே ஒவ்வொரு அணியிலையும் உள்ளவையின்ர ஆளடையாளத்தை வடிவா'செக்'பண்ணித்தான் விளையாட விடுறவை. அப்பிடியிருக்க தேசிய மட்டப் போட்டியில இப்பிடி ஆள்மாறாட்டம் செய்ய ஏலுமோ? நல்லதைப் பாராட்ட மனசில்லாட்டியும் அதை குறைசொல்லாமல் இருக்கிறது கூட ஒருவகையில உத்தமம் தான். இப்ப அந்த அதிகாரிக்கு எதிரா பள்ளிக்கூட பழையமாணவர்கள் மேலிடத்துக்கு அறிவிச்சிருக்கினமாம். ஆளுக்கு மேலிடம் கூப்பிட்டு மன்னிப்புக் கேக்கவைச்சு, வாய்க்கு பிளாஸ்ரரும் போடப்போகுது எண்டு சொல்லுகினம். பாப்பம் என்ன நடக்குதெண்டு.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில் வெளியாகவுள்ள 'போரின் சாட்சியம்'

ஈழநாதம் பத்திரிகையின் செய்தியாளராக கடமையாற்றி, தற்போது கனடாவில் வசித்து வருகின்ற சுரேன் கார்த்திகேசு எழுதியுள்ள, போரின் மூலம் ஏற்பட்ட இன அழிப்பு சாட்சியங்கள் மற்றும் ஒளிப்படங்கள் என்பவற்றை உள்ளடக்கி 'போரின் சாட்சியம்' என்ற நூல் நாளை மறுதினம் 27 ஆம் திகதி புதன்கிழமை கனடா வன்கூவர் நகரிலும், மே 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சுவிட்சர்லாந்து நகரிலும் வெளியீடு செய்யப்படவுள்ளது. இறுதிப் போர்க் காலத்தில் பணியாற்றிய சில ஊடகவியலாளர்களின் விவரங்கள் உள்ளடக்கப்பட்டு இந்த நூல் உருவாக்கப்பட்டுள்ளது. (ப-19)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சகோதர வகையில் எதிர்பாராத அல்லது எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். நண்பர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உறவினர்கள் வகையில் குடும்பத்தில் மகிழ்ச்சியுடன் செலவுகளும் ஏற்படும்.

**இடபம்:** கைவசம் பணம் இருந்தாலும் தந்தை வழியில் தேவையற்ற செலவுகள் ஏற்பட்டு கையிருப்பு கரையக்கூடும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும்.

**மிதுனம்:** உடல் ஆரோக்கியத்தில் அக்கறை அவசியம். நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள். மூன்றாவது நபரின் தலையீடு காரணமாக கணவன் – மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். இளைய சகோதர வகையில் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை நிலவும். மனதில் தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள்.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடிய வாய்ப்புண்டு. என்றாலும் சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்க வேண்டாம். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**கன்னி:** குடும்பம் மற்றும் பணி தொடர்பான எந்த ஒரு முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும்.

**துலாம்:** காலை முதலே உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும். வாழ்க்கைத்துணை உங்கள் பணிகளில் பங்கெடுத்துக் கொள்வது ஆறுதலாக இருக்கும்.

**விருச்சிகம்:** செயல்களில் இருந்த இழுபறி நீங்கி அனுகூலமாக முடியும் நாள். குடும்பத்தினர் உங்கள் பேச்சை ஏற்றுக்கொண்டு செயற்படுவார்கள். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படும்.

**தனுசு:** சகோதரர்கள் வகையில் எதிர்பாராத அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். முக்கியமான விஷயங்களில் அவசர முடிவுகள் மேற்கொள்வதைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள்.

**மகரம்:** முற்பகலில் அவசரமில்லாமல் செயற்படவேண்டிய நாள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்படும்.

**கும்பம்:** மனதில் இனம் தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. கணவன் – மனைவிக்கிடையே வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**மீனம்:** வீட்டில் மகிழ்ச்சியும் உற்சாகமும் நிறைந்து கலகலப்பான சூழ்நிலை காணப்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்குப் பக்கபலமாக இருப்பார்.



# காசநோய் விழிப்புணர்வு நிகழ்வுகள் வவுனியாவில்

வவுனியா, மார்ச் 26

காசநோய் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா மருத்துவமனையின் காசநோய் கட்டுப்பாட்டுப் பிரிவால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனையின் காசநோய்க் கட்டுப்பாட்டு மருத்துவ அதிகாரி கே.சந்திரகுமார் தலைமையில், 'ஆம் எங்களால் காசநோயை முடிவுக்குக் கொண்டுவர முடியும்' எனும் தொனிப்பொருளில் இந்த நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

விழிப்புணர்வு ஊர்வலம் மருத்துவமனையின் பின்வீதியில் அமைந்துள்ள மார்பு நோய் சிகிச்சைப் பிரிவில் ஆரம்பமாகி கண்டி வீதிக்குச் சென்று அங்கிருந்து பண்டாரவன்னியன் சதுக்கத்தை அடைந்து மன்னார் வீதியூடாக குருமன்காடு சந்தியை அடைந்தது. பின்னர் புகையிரத வீதியூடாக வவுனியா நகரையடைந்து அங்கிருந்து பசார் வீதியூடாக ஹொரவப்பொத்தானை வீதியை அடைந்து மருத்துவமனையைச் சென்றடைந்தது.

ஊர்வலத்தில் காசநோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவு மருத்துவர்கள், தாதியர்கள், தாதிய மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-18-110)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 26

சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக, சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்த பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவில் இந்த வாரம் 'சிவனடியார்களுக்கு துணி வழங்கிய நாயனார்' எனும் விடயப் பொருளில் பிரசங்க பூஷணம் சைவப்புலவர் செ. த. குமரனின் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோவில் பிரதான மண்டபத்தில், எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு சொற்பொழிவு நடைபெறவுள்ளது. சொற்பொழிவுகளைத் தொடர்ந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பரிசில் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

யாழ்ப்பாணம், மார்ச் 26

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச்சொற்பொழிவு, சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது. தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதரின் ஆசியுரையைத் தொடர்ந்து, இளம் சைவப்புலவர் க. கயிலைவாசன் 'ஆறு படை வீடுகளின் சிறப்புக்கள்' எனும் விடயப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு, பரிசில்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



# பிளாஸ்ரிக் பொருள்கள் அழிப்பு


சாவகச்சேரி, மார்ச் 26


தீங்கு விளைவிக்கும் பிளாஸ்ரிக் பொருள்களை பயன்படுத்தக் கூடாது என்ற அறிவிப்பினை மீறி சில உணவகங்களில் பயன்படுத்தப்பட்ட பிளாஸ்ரிக் இடியப்பத் தட்டுகள், உணவுப் பொருள்கள் வைக்கும் பிளாஸ்ரிக் பாத்திரங்கள் என்பன சாவகச்சேரி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் குழுவால் சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள இரு வெதுப்பகங்கள் மற்றும் நான்கு உணவகங்களில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டபோதே அவை கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. (எ-9)

# கும்பாபிஷேகம்

திருநெல்வேலி, அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் எண்ணெய்க்காப்பு நிகழ்வும் கும்பாபிஷேகமும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 6 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளன. (ப)





வரலாற்று சிறப்புமிக்க புளியம்பொக்கணை, நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்தின் இறுதி நாள் பொங்கல் நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. பூசை வழிபாடுகளிலும் பொங்கல் நிகழ்வுகளிலும் பெருந்திரளான பக்தர்கள் கலந்துகொண்டனர். (ப-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# வெம்மையைத் தணிக்கட்டும் ஜீவகாருண்யம்!

வடக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாக வெப்பம் வாட்டியெடுத்து வருகின்றது. வெப்பத் தணிப்புக்காகவும், வெப்பப் பேரிடரின் ஆபத்தம்சங்களை எதிர்கொள்வதற்காகவும் பல்வேறுபட்ட முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம். உணவுப் பழக்க வழக்கங்கள் முதல் ஆடைத்தெரிவுகள் வரை காலநிலைக்கு ஏற்றவாறு சில மாற்றங்களை நாம் ஏற்படுத்திக் கொண்டுள்ளோம். ஆனால், வெப்பப் பேரிடர் என்பது மனிதர்களுக்கு மட்டுமானதா? இந்தப் பேரிடரிலிருந்து எம்மைத் தற்காத்துக் கொண்டால் போதுமா? என்ற கேள்விக்குப் பதில் தேடவேண்டிய கட்டாயமும் இன்று எமக்கிருக்கின்றது.

எமது முன்னோரின் வாழ்வியல் தம்மைப் போலவே பிற உயிர்களை நேசிப்பதாகவும் இருந்தது. அதனால்தான் விலங்குகளின் நலனைக் கருத்திற்கொண்டு ஆவுரஞ்சிக் கல், தண்ணீர்த் தொட்டி என்பவற்றை ஊர்மனைகளிலும், நீர்நிலைகளை அண்டிய பகுதிகளிலும் பரவலாக அமைத்தார்கள். மாடுகள் முதலான விலங்குகள் தமது உடற்களைப்பையும், அலுப்பையும் போக்க உடலைத் தேய்ப்பதற்கு வசதியாகவே ஆவுரஞ்சிக் கற்கள் பயன்பட்டன. கோடைகாலங்களில் விலங்குகளின் தாகத்தைத் தணிக்க தண்ணீர்த் தொட்டிகளை அமைத்து, அவற்றை தினமும் நீரால் நிரப்பும் வழக்கமும் இருந்தது. கேணிகள், குளங்களை அண்டிய தங்குமிடங்கள் என அனைத்தும் வழிப்போக்கர்களுக்கும் விலங்குகளுக்குமான காருண்ய எண்ணப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டவைதான்.

தமிழர்களாகிய எமது பண்பாட்டில் 'ஜீவ காருண்யமும்' இரண்டறக் கலந்தேயுள்ளது. ஆனால், இன்று அதைத் தொலைத்தபடி நாம் பயணப்பட்டுக் கொண்டிருப்பதுதான் பரிதாபகரமானது. இன்றோ, இயந்திர மயமாகிப்போன வாழ்க்கை முறையும், வர்த்தகத்தை முதன்மையாகக் கொண்ட உலக ஓட்டமும் 'ஜீவ காருண்யம்' என்பதையே முற்றிலுமாகச் சிதைத்துவிட்டன. இருந்த இடம் தெரியாமல் சிதைந்து சின்னாபின்னமாகிப்போன நிலையிலேயே ஆவுரஞ்சிக் கற்கள் இருக்கின்றன. கேணிகள் இருந்த இடங்களை இன்று திருமண மண்டபங்களும், கடைத்தொகுதிகளும் ஆக்கிரமித்திருக்கின்றன. வணிகமும் நவீனமுமே எஞ்சிநிற்கின்றது. மறுபுறத்தில் வறட்சியைத் தாங்க முடியாது வாயில்லா ஜீவன்கள் வெப்பப் பேரிடரால் பேரின்னலை எதிர் கொண்டபடி அலைகின்றன.

இடர்மிகு காலநிலைகளில், வாயில்லா ஜீவன்களுக்கான செயற்றிட்டங்களுக்கு வெளிநாடுகளில் பஞ்சமேயில்லை. நாய்கள், டொல்பின்கள், பென்குயின்கள் என்று ஒவ்வொரு விலங்குகளைப் பாதுகாப்பதற்கும் தனித்தனியான அமைப்புகள் கூட மேற்கத்திய தேசங்களில் இயங்குகின்றன. அவ்வாறாக ஒழுங்கமைக்கப்பட்ட நடவடிக்கைகள் எம்மத்தியில் இல்லாவிட்டாலும் குறைந்தபட்சம் ஒவ்வொரு தனிமனிதனும் மேற்கொள்ளும் மாற்றம் கூட ஏதோவொரு உயிரை வாழவே வைக்கும். முற்றத்திலும், வீதியோரத்திலும் சிட்டுக்களுக்காகவும், ஆடு, மாடுகளுக்காகவும் நீர்நிரப்புவது கூட இக்காலத்தில் பூர்வஜென்ம புண்ணியமே.



# வேலையில்லாத் திண்டாட்டம் இலங்கையில் குறைகின்றது

**கொழும்பு, மார்ச் 26**

**இலங்கையில் நிலவிய வேலையில்லாப் பிரச்சினைகள் குறைவடைந்து வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இலங்கையில் கடந்த ஆண்டின் முதலாவது காலாண்டிலும் 2022ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டிலும் வேலையில்லாதவர்களின் பிரச்சினை 4.7 வீதமாகக் காணப்பட்டது. இது கடந்த வருடத்தின் இறுதிக் காலாண்டில் 4.3 வீதமாகக் குறைவடைந்துள்ளது என்று புள்ளி விவரங்களின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## சுற்றுலாவிகள் வருகை அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 26

இந்த மாதத்தின் 20 நாள்களில் நாட்டுக்குள் வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த 20 நாள்களில் ஒரு லட்சத்து 31 ஆயிரத்து 684 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர். இந்தியாவில் இருந்தே அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## நீதிமன்றங்களில் ஆங்கில மொழி

கொழும்பு, மார்ச் 26

வர்த்தக உயர் நீதிமன்றங்களில் பதிவுகள் மற்றும் நடவடிக்கைகளுக்கான அனைத்து நோக்கங்களுக்கும் ஆங்கில மொழியைப் பயன்படுத்த அனுமதிக்கும் அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பை நீதியமைச்சர் வெளியிட்டுள்ளார்.

வர்த்தகத் துறையில் ஆங்கில மொழியேபிரதானமாகப்பயன்படுத்தப்படுகின்றது என்றும், அந்த உள்ளடக்கங்களை சிங்கள மொழியில் மொழிபெயர்ப்பதற்கு கணிசமான செலவும் நேரமும் தேவைப்படுகின்றது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-இ)

## விபத்தில் நால்வர் காயம்

கொழும்பு, மார்ச் 26

அம்பாறை மூவாங்கலை வீதியில் கெப் வண்டியும் காரொன்றும் மோதி விபத்துக்கு உள்ளானதில் நால்வர் காயமடைந்துள்ளனர்.

கப் ரக வாகனத்தின் ரயர் ஒன்று காற்றுப் போனதையடுத்தே வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த காருடன் மோதி கப் வாகனம் விபத்துக்குள்ளாகியுள்ளது.

கப் வண்டியில் பயணித்த நால்வரே காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(எ-இ)



## பால் தேநீரின் விலை குறையும்?

கொழும்பு, மார்ச் 26

பால் தேநீரின் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அகில இலங்கை உணவக உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலையைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ள நிலையில், பால்தேநீரின் விலையைக்குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது 100 ரூபாவாக உள்ள பால் தேநீரின் விலை 90 ரூபாவாகக் குறைக்கப்படலாம் என்று அந்தச் சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் தெரிவித்துள்ளார்.

(எ-இ)

### நாளை

27.03.2024

**புதன்கிழமை**

**பங்குனி–14**

சுபநேரம் : 04.44 –06.14

ராகுகாலம் : 12.14 – 01.44

### நாளொரு நல்வார்த்தை

**மன உறுதி இல்லாதவனுடைய உள்ளம் குழம்பிய கடலுக்கு ஒப்பானது.**

**–சுப்பிரமணிய பாரதியார்–**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மொஸ்கோ தாக்குதலில் உக்ரைனியப் பின்னணி!

## ரஷ்ய அதிகாரிகள் பரபரப்புத் தகவல்

மொஸ்கோ, மார்ச் 26

**ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் ஈடுபட்டவர்களுக்கு உக்ரைனியப் பின்னணி உள்ளதாக ரஷ்யாவின் மூத்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**

மொஸ்கோவின் மேற்குப் பகுதியில் உள்ள பிரமாண்டமான இசையரங்கம் ஒன்றிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. தாக்குதலில் 150 க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 120 க்கும் மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தத் தாக்குதலை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு மேற்கொண்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்திருந்தபோதிலும், தாக்குதலின் பின்னணி தொடர்பில் ரஷ்யா எந்தக் கருத்தையும் முன்வைக்கவில்லை.

தாக்குதல் நடத்திய நால்வரும், அவர்களுக்கு உதவியவர்களுமாக 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் தீர்க்கமாக விசாரித்த பின்னரே, தாக்குதலின் பின்னணி தொடர்பில் ரஷ்யா உறுதிப்படுத்தும் என்றும் தாக்குதல் நடத்தியவர்கள் உக்ரைனை நோக்கித் தப்பியோடியதால் பல்வேறு கோணங்களில் ஆராயப்பட வேண்டியுள்ளதாகவும் ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில், தாக்குதல்தாரிகள் உக்ரைனியப் பின்னணியைக் கொண்டுள்ளனர் என்றும் தஜிகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த தாக்குதல்தாரி பல விடயங்களை சாட்சியப்படுத்தியுள்ளார் எனவும் ரஷ்ய மூத்த அதிகாரிகள் தற்போது தெரிவித்துள்ளனர்.

'இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய அனைவரையும் தனித்தனியாக வேரறுப்போம்' என புடின் முன்னதாக எச்சரித்திருந்தமையும், 'உக்ரைன் இது போன்ற கீழ்த்தரமான தாக்குதல்களில் ஈடுபடாது' என்று ஷெலன்ஸ்கி தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

## தேசியப் பாதுகாப்பை பலப்படுத்திய பிரான்ஸ்

பரிஸ், மார்ச் 26

மொஸ்கோவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களைத் தொடர்ந்து தனது தேசியப் பாதுகாப்பை பிரான்ஸ் பலப்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் மற்றும் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகளுடனான சந்திப்பின் பின்னர் பிரதமர் கேப்ரியல் அட்டல் இந்த விடயத்தை அறிவித்துள்ளார். (ம)

## சிவசக்தி அனுமதி

நிலவின் தென் துருவத்தில் இந்தியாவின், சந்திரயான்-3 விண்கலம் தரை இறங்கிய இடத்துக்கு 'சிவசக்தி' எனப் பெயரிடப்பட்டிருந்த நிலையில், அதற்கு சர்வதேச வானியல் சங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.

வானியல் ஆய்வில் புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் கோள்கள், இடங்கள் ஆகியவற்றுக்கு வைக்கப்படும் பெயர்களுக்கு சர்வதேச வானியல் சங்கத்தின் ஒப்புதலைப் பெறவேண்டும்.

அதன்பின் அந்தப் பெயர்கள், கோள்களுக்கான அறிவிப்பு இதழில் வெளியிடப்படும்.

நிலவின் தென் துருவத்துக்கு இந்தியா அனுப்பிய சந்திரயான்-3 விண்கலத்தின் விக்ரம் லாண்டர் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி வெற்றிகரமாகத் தரையிறங்கியது. தரையிறங்கிய இடத்துக்கு 'சிவசக்தி' என பிரதமர் மோடி பெயர் வைத்தார். அந்தப் பெயருக்கு சர்வதேச வானியல் சங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.

ஒப்புதலைத் தொடர்ந்து விக்ரம் லாண்டர் தரையிறங்கிய இடத்தை, 'சிவ சக்தி' என்றே உலக நாடுகள் அழைக்க ஆரம்பிக்கும். (ம)

## மேலும் 2 மருத்துவமனைகள் இஸ்ரேலின் முற்றுகைக்குள்!

இஸ்ரேலியப் படைகள் காஸாவில் உள்ள மேலும் இரு மருத்துவமனைகளை முற்றுகையிட்டுள்ளன என்றும் காஸாவில் செயற்படும் தொண்டு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

காஸாவில் மிகப்பெரும் மருத்துவமனையான அல் ஷிபா மருத்துவமனையை முற்றுகையிட்ட இஸ்ரேலியப் படைகள் கடந்த ஒரு வாரகாலமாக அங்கு தீவிரமாக தாக்குதல்களை நடத்தி வருகின்றன. பொதுமக்கள், ஊடகவியலாளர் மீது நடத்தப்படும் கொடூரமான தாக்குதல்களுக்கு உலக நாடுகள் கண்டனங்களைத் தெரிவிக்கின்றபோதிலும் இஸ்ரேல் தன் நிலைப்பாட்டை மாற்றுவதாயில்லை.

மருத்துவமனையில் ஹமாஸ் குழுவினர் உள்ளனர் என்றும் அவர்களுக்கு எதிராகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் இஸ்ரேல் அறிவித்திருந்தது. இந்த நிலையிலேயே, காஸாவில் உள்ள மேலும் இரு மருத்துவமனைகள் இஸ்ரேல் இராணுவத்தால் தற்போது சுற்றிவளைக்கப்பட்டு முற்றுகையிடப்பட்டுள்ளன. இதை காஸாவில் உள்ள தொண்டு நிறுவனங்களும் பலஸ்தீன சுகாதார அமைச்சும் உறுதிப்படுத்தியுள்ளன. நிலைமை மோசமாகிக் கொண்டிருப்பதாக அந்தத் தரப்புகள் எச்சரித்துள்ளன. (ம)

## பாலைவனத்தில் மனிதப்புதைகுழி



திரிபோலி, மார்ச் 26

லிபியப் பாலைவனத்தில் மனிதப்புதைகுழியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்தப் புதைகுழிக்குள் இருந்து 65 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஆபிரிக்காவில் இருந்தும் மத்திய கிழக்கில் இருந்தும் ஐரோப்பாவுக்குள்ளும் மேற்கு நாடுகளுக்குள்ளும் அகதிகளாகச் செல்வோரின் பிரதான சட்டவிரோத வழித்தடங்களில் ஒன்றாக லிபியப் பாலைவனங்கள் காணப்படுகின்றன. இவ்வாறு செல்லும்போது பலர் உணவும் தண்ணீரும் இல்லாமல் பாலைவனத்தில் கொத்துக்கொத்தாக இறந்துபோவதும் உண்டு. ஆதலால், கண்டுபிடிக்கப்பட்ட இந்த மனிதப்புதைகுழியில் உள்ள சடலங்கள் பாலைவனத்தால் சட்டவிரோதப் பயணம் மேற்கொண்டபோது இறந்துபோன அகதிகளுடையதாக இருக்கலாம் என்று முதல் கட்டத் தகவல் வெளிவந்துள்ளது. லிபிய அரசாங்கம் அந்தப் புதைகுழி தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (ம)

## இந்தியாவுடன் வர்த்தகம்; பாகிஸ்தான் பரிசீலனை!

இந்தியாவுடன் மீண்டும் வர்த்தக உறவுகளைக் கட்டியெழுப்புவது தொடர்பில் பாகிஸ்தான் தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றது.

புல்வாமா தாக்குதல்களைத் தொடர்ந்து இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான வர்த்தக உறவுகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டன. இந்த நிலையிலேயே, இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவை மீண்டும் கட்டியெழுப்ப தீவிர நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பாகிஸ்தானின் வெளிவிவகார அமைச்சர் ஐசக் தெரிவித்துள்ளார்.

லண்டனில் இடம்பெறும் அணு சக்தி மாநாட்டில் கலந்துகொண்டுள்ள ஐசக், "பாகிஸ்தான் தொழிலதிபர்கள் இந்தியாவுடன் வர்த்தகத்தை மீண்டும் தொடர வேண்டும் என்று விரும்புகின்றனர். அதன் காரணமாக இந்தியாவுடனான வர்த்தக உறவை மீட்டெடுப்பது குறித்து பாகிஸ்தான் தீவிரமாக பரிசீலித்து வருகிறது" என்று தெரிவித்துள்ளார். (ம)

# பெண்களுக்கு ஜல்லிக்கட்டு!

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, தமிழகத்தில் அடுத்த ஆண்டுமுதல் பெண்களுக்கும் ஜல்லிக்கட்டுப் போட்டியை நடத்த ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பொங்கல் பண்டிகை நாள்களில் மதுரை மாவட்டம் அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூரில் நடக்கும் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் உலகப்புகழ் பெற்றுள்ளன. தமிழகத்தின் சுற்றுலாத்துறை ஜல்லிக்கட்டை மையமாக வைத்தும் தற்போது விரிவாக்கப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே, அடுத்தவருடம் முதல் பெண்களுக்கும் ஜல்லிக்கட்டுப் போட்டியை நடத்துவது தொடர்பில் பரிசீலிக்கப்படுகின்றது.

இதுவரை காளைகளை வளர்ப்பது, பயிற்சி அளிப்பது, ஜல்லிக்கட்டு நடைபெறும் இடத்துக்கு காளைகளை அழைத்து வந்து வாடிவாசலில் அவிழ்த்துவிடுவது, களத்தில் இறங்கி காளைகளை அடக்க முயற்சிப்பது என அனைத்தையும் ஆண்களேசெய்துவந்தனர். ஜல்லிக்கட்டுக்காளைகளை வளர்ப்பதில் மட்டுமே பங்களித்து வந்த பெண்கள், அண்மைக்காலமாக வாடிவாசலில் காளைகளை அவிழ்த்துவிடும் நிகழ்விலும் பங்கேற்கத் தொடங்கியுள்ளனர். இந்நிலையில், பெண்கள் மட்டுமே பங்கேற்கும் ஜல்லிக்கட்டுப் போட்டியை நடத்த சுற்றுலா நிறுவனங்கள், அமைப்புகள் முயற்சி எடுத்து வருகின்றமை தமிழகத்தில் பேசுபொருள் ஆகியுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் Kingstar Travels & Tours (Pvt) Ltd க்கு வேலையாளர்கள் (பெண்கள்) தேவை.
நேர்முகத்தேர்வு எதிர்வரும் வியாழக்கிழமை 28.03.2024 அன்று முற்பகல் 10.30 - 1.00 pm வரை நடைபெறும்.

**076 904 6777, 077 244 5902**


## பாராட்டி வாழ்த்துகின்றோம்







Congratulations

**திருமதி கஜர்சனா நிஷாத்** **செல்வி சுஜிதா நாகேஸ்வரன்**

யாழ். பல்கலைக் கழகத்தில் 16.03.2024 சனிக்கிழமை அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் **கலைமாணிப் (B.A) பட்டம்** பெற்ற எமது ஆசிரியர்களை மனதார வாழ்த்துவதுடன் மேலும் கல்வியில் உயர்ந்து பல பட்டங்களைப் பெற்று வாழ்வில் உயர்ந்திட அன்புடன் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: **ஆசிரியர் நலன்புரிக்கழகம்,**
**யா/ யாழ். இந்து ஆரம்ப பாடசாலை**

(CS/54531) J-1

## மரண அறிவித்தல்



மலர்வு 01 . 05 . 1935

உதிர்வு 23 . 03 . 2024

**ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை** (வெள்ளை ஐயா)
(சமாதானநீதவான் - J.P )

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பரவிப்பாஞ்சான் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை (J.P) சமாதான நீதவான் (வெள்ளை ஐயா) கடந்த 23.03.2024 சனிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற தேவி அம்மாவின் அன்புக் கணவரும், தேவானந், சாரதா, பிரேமானந், கணேசானந், ஞானாநந், விவேகானந் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்டிவன் ரெட்னேசன், ரூபி, வசந்தி, சிந்து, ராதிகா ஆகியோரின் அன்பு மாமனாரும், கார்த்திகா, நிவேதா, நிவேதன், சசி, துளசி, இசை, கீர்த்தி, கபிலன், சியான், சுயூ, ஒலிவன், சாட்ராக், அனலிக்கா, அவிரோன் ஆகியோரின் அன்புப் பேரனும், நிதான்சிகா, பிரபாசிகா கெல்வின், கெவின், லியாணி, லெயோன், ஜெய்ரூஸ் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.03.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, வன்னேரி முதியோர் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 3.00 மணியளவில் வன்னேரி முதியோர் இல்ல மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(28252) N-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 06 . 04 . 1944

மறைவு 25 . 03 . 2024

**வயித்திலிங்கம் மருதலிங்கம்**

(ஓய்வு பெற்ற தபால் அதிபர், சமாதான நீதவான் (J.P), முன்னாள் கும்பழாவளை செயலகப் பொறுப்பாளர், நீண்டகால சைவ வாலிப சங்க செயலாளர், அளவெட்டி மத்தி மூத்த பிரஜைகள் சங்க தலைவர், ஆலயங்களில் ஓதுவார், கும்பழாவளை தொண்டர்சபையினரின் ஆலோசகர்)

வயித்திலிங்கம் மருதலிங்கம் அவர்கள் நேற்று (25.03.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நவாலி தெற்கு, அமரர்கள் வயித்திலிங்கம் - மருதரத்தினம் தம்பதியரின் ஏக புத்திரனும், சதானந்தா பாடசாலை வீதி, அளவெட்டி, அமரர்கள் நாகராசா - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், அமரர் மருதலிங்கம் திலகவதியின் அன்புக் கணவரும், கணேசலிங்கம் (முன்னாள் வடமாகாண பிரதம செயலாளரின் பாதுகாப்பு உத்தியோகத்தர்), திருமதி வசந்தி சிவானந்தன், அமரர் சண்முகலிங்கம் (சண்) ஆகியோரின் தந்தையாரும், சர்மிளன், யஸ்வினி, அபிவஷ்சியா, வைஷ்ணவன் ஆகியோரின் அன்புக்குரிய பாட்டனாரும், முள்ளானை கதிரவேலு சிவானந்தன் சங்குவேலி கணேசலிங்கம் விஜயகுமாரி (பட்டு) ஆகியோரின் அன்புக்குரிய மாமனாரும் ஆவார்.


அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (26.03.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கும்பழாவளை**
**அளவெட்டி**

(CS 28347) S-1

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு



தோற்றம் 02 . 01 . 1951

மறைவு 27 . 02 . 2024

கடந்த 27.02.2024 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்த
எங்கள் குடும்ப விளக்கு

**அமரர் சுப்பிரமணியம் பரதனாலிங்கம்**

அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக்கிரியை 26.03.2024 இன்று அம்பலவன் பொக்கணை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக் கிரியைகள் நாளை மறுதினம் (28.03.2024) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்வதுடன் எமது குலவிளக்கின் இழப்பால் துன்புற்றிருந்த வேளை நேரடியாகவும், தொலைபேசியூடாகவும், சமூகவலைத்தளங்கள் மூலமும் எமக்கு ஆறுதல் வார்த்தைகளைக் கூறிய அனைவருக்கும் எமது குடும்பம் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**10ம் வட்டாரம்,**
**புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.**

(CR/41970) J-1

**குடும்பத்தினர்**
**077 383 7468**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுப் பேருரை

யாழ்., மார்ச் 26

வாழ்நாள் பேராசிரியர் சி.சிவஞானசுந்தரத்தின் நினைவுதினத்தை முன்னிட்டு "ஈழத்து தமிழ் இலக்கிய மொழி பெயர்ப்புகள், ஆழமும் விரிவும் தேடி" எனும் தொனிப்பொருளில் நினைவுப் பேருரை நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட அரங்கில் நாளை புதன்கிழமை பி.ப 3 மணிக்கு நடைபெறவுள்ளது. நினைவுப் பேருரையை யாழ்.பல்கலைக் கழகத் தமிழ்த் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.குமரன் ஆற்றவுள்ளார்.

(எ)


## மரண அறிவித்தல்



தோற்றம் 04 . 06 . 1962

மறைவு 25 . 03 . 2024

### செல்வி கார்த்திகேசு வரதா

**(முன்னாள் புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பணியாளர்)**

புங்குடுதீவு 01ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 03ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு வரதா அவர்கள் நேற்று (25.03.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - புஸ்பவதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கம்மா, சின்னத்தம்பி - அன்னப்பிள்ளை ஆகியோரின் பேர்த்தியும், வசந்தா, வதனி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஸ்ரீஸ்காந்தன் (சிறிகடை) அவர்களின் அன்பு மைத்துனியும், சிவகஜனி (சாளினி - முன்பள்ளி ஆசிரியர்), சாரங்கன் (Esoft) ஆகியோரது சிறிய தாயாரும், உருத்திரகண்ணாவின் பாசமிகு மாமியாரும், ஷஷ்வினி, ஸ்ரீவர்னி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஸ்ரீவரதன், ஸ்ரீதரன் (பொலிவியா), ஸ்ரீபாலன் (ஜேர்மனி), புஸ்பமாலா, ரஞ்சிதமாலா, ஜெயமாலா, காலஞ்சென்ற ஜீவமாலா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக புங்குடுதீவு மணற்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**03ம் வட்டாரம், புங்குடுதீவு.**
**074 132 2350**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 28346) S-1

## வேலையாள் தேவை

மன்னாரில் உள்ள சைவ உணவகத்திற்கு அனுபவம் மற்றும் Hotel Management கற்ற 30 வயதுக்கு மேற்பட்ட ஆண்/பெண் முகாமையாளர் ஒருவர் தேவை. தகுந்த ஊதியம் வழங்கப்படும்.

விண்ணப்பங்களை 06.04.2024 மாலை 5.00 முன்னர் "திருக்கேதீஸ்வரம் சிவனருள் இல்லம்" - மன்னார் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

தொடர்புகளுக்கு: **077 5815 998**

## 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 20 . 02 . 1947

மறைவு 26 . 03 . 1999

### திருமதி அனற்றா இம்மானுவேல்

மண்ணில் பிறந்தோர் இறந்திடுவர் என்றாலும்
மண்ணில் எம்மைப் பிறப்பித்த எங்கள் அம்மா
மகிழ்ச்சியாக எம்முடன் வாழ்ந்த உங்களைக்
காலனவன் பறித்து இருபத்தைந்து வருடங்களாகிவிட்டதே

குடும்பமே கண்ணாக குதூகலத்துடன் வாழ்ந்தீர்
குவலயத்தில் எங்கள் வாழ்வு சிறப்பதற்காய் உழைத்தீர்
கூட்டினில் ஒரு பறவை தூரமாய்ப் போய்விட்டதே
கூடிவாழும் அதிர்ஷ்டம் இல்லாமல் தவிக்கின்றோம்

எம்மை விட்டு நீர் பிரிந்தாலும் என்றும் எம்மனங்களில்
எம்மோடு இருந்து நல்வழிப்படுத்தும் அம்மா
எங்களுக்காய் என்றும் இறைவனை மன்றாடும்
என்றும் உமதான்மா இறைவனில் சாந்தியடைக

**சில்லாலை வடக்கு**
**பண்டத்தரிப்பு.**

**உங்கள் ஆன்ம சாந்திக்காகப்**
**பிரார்த்திக்கும்**
**கணவர், பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(CS/54505) J-1

## மரண அறிவித்தல்

# குழந்தைவேலு கனகபூசணம் (தேவி)



மலேசியா கோலாலம்பூரைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் மேற்கு கொத்தியாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தைவேலு கனகபூசணம் (தேவி) கடந்த 23.03.2024 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நன்னித்தம்பி - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற குழந்தைவேலுவின் பாசமிகு மனைவியும், கனகரட்னம் (மலேசியா), இராசரத்தினம் (நாகம்ஸ்), அரசரட்னம் (நாகம்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற பிரகாஞ்சனி மற்றும் சிவபாலன் (கனடா), கிருஸ்ணவேணி (திருகோணமலை), சிவஞானம் (நியூசிலாந்து), சிவகுமார் (நியூசிலாந்து), கலைவாணி (சுவிஸ்), சிவதாஸ் (கனடா), சிவனேசன் (நியூசிலாந்து), யோகாஞ்சலி (அமெரிக்கா), சிவயோகம் (அவுஸ்ரேலியா), சிவரூபன் (நியூசிலாந்து), சந்திரவதனி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் பவி (கனடா), செங்கேஸ்வரன் (திருகோணமலை), மகேஸ்வரி (நியூசிலாந்து), ரஜினி (நியூசிலாந்து), சிதம்பரநாதன் (அமெரிக்கா), ஜெயந்தினி (அவுஸ்ரேலியா), தர்மினி (நியூசிலாந்து), கௌரிகாந் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சிவக்கொழுந்து மற்றும் புஸ்பா (மலேசியா), காலஞ்சென்ற அம்பிகாதேவி மற்றும் நவரஞ்சினிதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.03.2024) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**076 605 4546**

**தோற்றம் 02.01.1939**


**மறைவு 23.03.2024**

(CS/54533) N-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய கிராமங்களிலுள்ள மாணவர்களுக்கு, புலம்பெயர் வாழ் உறவுகளின் நிதியனுசரணையில், உரும்பிராய் உதவும் நண்பர்கள் அமைப்பின் ஏற்பாட்டில், இலவச கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. செயற்றிட்டத்தின் இரண்டாவது பகுதியாக, ஊர்காவற்றுறை, நாரந்தனை றோ.க.மகா வித்தியாலயத்தில் தெரிவுசெய்யப்பட்ட 52 மாணவர்களுக்கு சுமார் ஒரு இலட்சத்து 33 ஆயிரம் ரூபா பெறுமதியான இலவசக் கற்றல் உபகரணங்கள் மற்றும் பயனுள்ள மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு என்பன பாடசாலை மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றன. (ப–66)



சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் தலைமையில் வாராந்தச் சொற்பொழிவு நிகழ்வு, கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் ஆசிரியர் இரா.செல்வவடிவேல் கலந்து கொண்டு மகாபாரதச் சொற்பொழிவை ஆற்றினார். (ப–66)



கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்தகாலபோகத்தில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கையில், கபில நிறத்தத்தியின் தாக்கம் காரணமாக விவசாயிகள் பெரும் நஷ்டத்தை எதிர்கொண்டனர். இந்தப் பூச்சிகளைக் கட்டுப்படுத்தி இனிவரும் சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்வது தொடர்பாக வட்டக்கச்சி மற்றும் இராமநாதபுரம் விவசாயிகளைத் தெளிவூட்டும் வகையில் கலந்துரையாடல் ஒன்று வட்டக்கச்சி சனசமூக நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டப் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், விவசாய ஆராய்ச்சி உதவிப்பணிப்பாளர் எஸ். இராஜேஷ்கண்ணா, பாடவிதான உத்தியோகத்தர், விவசாய போதனாசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப–113)

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலிருந்த கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிளிநொச்சி நகரம், மலையாளபுரம், கிருஷ்ணபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளின் ஒரு தொகுதிக் காணிகள் பிரதேச செயலாளர் த.முகுந்தனிடம் கடந்த வியாழக்கிழமை கையளிக்கப்பட்டன. (எ–13)





பொருண்மியம் நலிவுற்ற மாணவர்களுக்கான இலவச கற்றல் உபகரணங்கள் வழங்கல் மற்றும் மலிவு விற்பனைக் காட்சியறைத் திறப்பு விழா மன்னார் மாவட்ட செயலக வளாகத்தில், புலம்பெயர் உறவுகளின் நிதியனுசரணையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. மன்னார் மாவட்டக் கைத்தொழிலாளர் சங்கத்தின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மன்னார் மாவட்ட செயலர் க.கனகேஸ்வரன், புலம்பெயர்ந்து வாழும் அமைப்புகளின் பிரதிநிதிகளாகப் புலம்பெயர்ந்து வாழும் த.இளங்கோ மற்றும் த.அருண், டிலாசல்சபை அருட்சகோதரர் மனோ, மேலதிக செயலர், பிரதம உள்ளக் கணக்காய்வாளர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப–60)



தற்போது ஐக்கிய இராச்சியத்தில் வசித்து வரும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் பழையமாணவர் ஆசிரிய சங்கத்தினரால், சாவகச்சேரி சக்தி அம்மன் பாடசாலை மாணவர்களின் பயன்பாட்டுக்காக, இரண்டு கணினிகள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கிவைக்கப்பட்டன. (ப–9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'ரைட் டு லைப்' நிறுவனத்தால், தலைமன்னார் பிராதன வீதியில் அமைந்துள்ள இலங்கை செஞ்சிலுவைச்சங்க மண்டபத்தில் மனித உரிமை சிகிச்சை நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. பிரதம அதிதியாக மன்னார் பிரஜைகள் குழுத் தலைவர் அருட்பணி எஸ்.மாக்கஸ் அடிகளாரும், சிறப்பு விருந்தினர்களாக குறித்த நிறுவனத்தின் பணிப்பாளர் பிலிப் திஸாநாயக்க, திட்ட இணைப்பாளர் பிரசாந்தன், திட்ட அலுவலகர் மதுஷாலினி மற்றும் நிறுவனத்தின் மன்னார் இணைப்பாளர் எஸ்.டிலக்ஷன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம-66)

**உடுவில் மத்திய விளையாட்டுக் கழகம் ஆண்டுப் பொதுக்கூட்டம் - 2024**

- இடம் : கழக மண்டபம் (சிவஞானப் பிள்ளையார் கோவிலடி, மானிப்பாய் வீதி, உடுவில்)
- காலம் : 07.04.2024 ஞாயிற்றுக்கிழமை
- நேரம் : பிற்பகல் 5.00 மணி

மேற்படி கூட்டத்தில் கழக அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அ.கோகுலன்
செயலாளர்,
உடுவில் மத்திய விளையாட்டுக்கழகம். 077 176 6257



தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் மார்ச் மாத வேலைத் திட்டத்தின் கீழ், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைத் திணைக்களம் இணைந்து நடத்திய சிறுவர் திறன் விருத்திக்கான விளையாட்டுப் பயிற்சிகள், கடந்த புதன்கிழமை கச்சாய் மகா வித்தியாலயத்திலும் கடந்த வியாழக்கிழமை அல்லாரை அ.த.க. பாடசாலையிலும் இடம்பெற்றன. (ப-9)

**இதய அஞ்சலி**



அமரர்
**கந்தையா சண்முகலிங்கம்**

தோற்றம் 24.10.1946 மறைவு 23.03.2024

எமது விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகத்தில் வன்பந்து துடுப்பாட்டத்தினை (Lather ball cricket) மீள ஆரம்பிப்பதற்கு காரணகர்த்தாக்களில் ஒருவராக இருந்த யாழ்மாவட்டப் பயிற்றுவிப்பாளரின் மரணச்செய்தி கேட்டு கல்லூரிச் சமூகம் அதிர்ச்சியடைந்துள்ளது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

(CS 28349) S-1

பிரிவால் துயருறும்
விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகம்
சுழிபுரம்

# குழுவாக இயங்கும் தன்மை மாணவர்களுக்கு அவசியம்

## முல்லை. மேலதிக மாவட்டச் செயலர் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, மார்ச் 26

மாணவர்கள் மத்தியில் வன்முறை எண்ணங்களை இல்லாது செய்து, குழுவாக இயங்குகின்ற தன்மையை ஏற்படுத்தவேண்டும் என முல்லைத்தீவு மேலதிக மாவட்டச் செயலர் சி.குணபாலன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் ஏ.யூ. லங்கா நிறுவனத்தின் ஏற்பாட்டில், பாடசாலை மட்ட வன்முறைத்தடுப்பு நடைமுறைகள் திறன் விருத்திப் பயிற்சி மற்றும் மாவட்ட சிறுவர் சபை உருவாக்கம், சிறுவர் பாதுகாப்பு ஆகிய நிகழ்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாணவர்கள் மத்தியில் வன்முறை எண்ணங்களைக் களைவதற்கு மாணவர்கள் கூடுதலாக குழு விளையாட்டுகளில் ஈடுபட வேண்டும். அப்போதுதான் தலைமைத்துவப் பண்புகளும், வெற்றி தோல்விகளைச் சமமாகக் கருதுகின்ற மனப்பாங்கும் உருவாகும். இதில் ஆசிரியர்கள் பங்கு மிக முக்கியமானது. ஆசிரியர்கள் மாணவர்களை அன்பாக வழி நடத்துவதன் மூலமே மாணவர்கள் நற்பண்புகளை வளர்த்துக்கொள்வார்கள்- என்றார். (ப-13)

**மரண அறிவித்தல்**

†

தோற்றம் 28 . 06 . 1948



மறைவு 23 . 03 . 2024

**பெபெச்சுவா மாறி அன்ரன் கிறிஸ்டியன்**

இல.16, எக்கித்தலேன், வத்தளையைப் பிறப்பிடமாகவும், இல.18, கதீற்றல் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட பெபெச்சுவா மாறி அன்ரன் கிறிஸ்டியன் அவர்கள் கடந்த (23.03.2024) சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் அன்ரன் B.L.இன்பராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ரெறி மனோ தைரியர் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அலெக்சாண்டர் - ரோஸ் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற Richard Jacintha மற்றும் Joy Boy (Canada), Anno (Colombo) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 09.30 மணியளவில் பெரிய கோவிலில் நடைபெற்று, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணவர்

(CR 41971) S-1

**மரண அறிவித்தல்**

தோற்றம் 09 . 05 . 1935



மறைவு 25 . 03 . 2024

**திருமதி பூரணம் யோகசேகரம்**

கச்சேரியடி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூரணம் யோகசேகரம் அவர்கள் 25.03.2024 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு-கனகம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சபாபதி-துரையம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற யோகசேகரம் (ஓய்வு பெற்ற அரச மொழிபெயர்ப்பாளர்) அவர்களின் அன்பு மனைவியும், முரளீதரன் (கனடா), சிவகாமி (ஆசிரியை கொழும்பு), யாழ்தரன் (முகாமையாளர் Allianz Insurence) ஆகியோரின் அன்புத் தாயாரும், புஷ்பராணி (கனடா), கோகுலேந்திரா (வைத்தியர் கொழும்பு), அபிராமி (ஆசிரியை சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), ஆகியோரின் மாமியாரும், அபிநயா, கபிலன், அபிராமி, ஆதிரை, அகரன், ஆரதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் காலஞ்சென்றவர்களான பரமேஷ்வரி, சௌந்தரராணி, தர்மாம்பிகை ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 27.03.2024 புதன்கிழமை அவரது வீட்டில் நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 92, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
076 620 3058

தகவல்:
குடும்பத்தினர்

(CS 28550) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செலான் வங்கி தனது 36ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் 'செலான் பகசர திட்டம்' ஊடாக மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் நூலகத்தை நேற்றுத் திறந்து வைத்துள்ளது. (ஒ-இ)

# மாணவர் கௌரவிப்பும் கவிதை நூல் வெளியீடும்


மட்டுவில் கிழக்கு வில்சன் சனசமூக நிலையத்தின் 46ஆவது ஆண்டு விழா, தரம் 5 புலமைப் பரீட்சை, கல்விப் பொதுத் தராதரம் சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு, கவிஞர் கி.கலைத்தாசனின் 'உணர்வின் விதைகள்' எனும் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு என்பன நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன. நிலைய முன்றிலில் இடம்பெற்ற நிகழ்வில் தலைவர் சி. அமிர்தலிங்கம் தலைமையுரையாற்றினார். (ப-36)

# இல்ல மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ். இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நிகழ்வு, கல்லூரி மைதானத்தில் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரித்தானியாவின் குடிவரவு சட்ட ஆலோசகர் க.பிரபாகரன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ப-66)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மஹா கும்பாபிஷேகப் பெருவிழா, பக்தர்கள் புடைசூழ கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. மஹா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 நாள் மண்டலாபிஷேக உற்சவம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-27)



## வடக்கு...

மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கில் 52 பேர் கடந்த ஆண்டு கொலைசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகத்தில் 129 பேர் கைதாகியுள்ளனர். இவர்களில் 38 பேர் மாத்திரம் நீதிமன்றத்தின் ஊடாகப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (அ-ஒ-5)

| பொலிஸ் பிராந்தியம் | கொலைச் சம்பவங்களின் எண்ணிக்கை | கைதான சந்தேகநபர்களின் எண்ணிக்கை | நீதிமன்றம் மூலம் பிணையில் விடுவிக்கப்பட்டவர்கள் |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 14 | 44 | 11 |
| காங்கேசன்துறை | 05 | 09 | 05 |
| மன்னார் | 04 | 11 | 06 |
| வவுனியா | 08 | 17 | 04 |
| முல்லைத்தீவு | 08 | 11 | 07 |
| கிளிநொச்சி | 13 | 37 | 05 |

## தேவாலயங்களின்...

கிறிஸ்தவர்களின் தவக்காலத்தின் மிக முக்கியமான காலப் பகுதியான பெரிய வெள்ளி எதிர்வரும் 29ஆம் திகதியும் உயிர்த்த ஞாயிறு எதிர்வரும் 31ஆம் திகதியும் கொண்டாடப்படவுள்ளன.
இந்த நிலையில், அனைத்துத் தேவாலயங்களுக்கும் வரும் யாத்திரிகர்கள் மற்றும் அவர்களது பயணப்பொதிகளைச் சோதனையிடும் விசேட வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு அனைத்துப் பொலிஸ் பிரிவுகளுக்கும் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் நேற்று உத்தரவிட்டுள்ளார்.
சமூக பொலிஸ் குழுக்கள், அந்தந்த தேவாலயங்களின் அருட்தந்தையர்கள் மற்றும்அமைப்பாளர்களுடன் இணைந்து வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி, பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு பொலிஸ்மா அதிபர் சகல பிரிவுகளுக்கும் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.
2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சூத்திரதாரிகளைத் தனக்குத் தெரியும் என்று தாக்குதல் நடைபெற்ற காலப் பகுதியில் ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார். இதேவேளை - அந்தத் தாக்குதலுக்கு உதவிபுரிந்தார் என்று குற்றம் சுமத்தப்பட்ட பிள்ளையான் என்று அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனும், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் புத்தகம் ஒன்றை அண்மையில் வெளியிட்டிருந்தார். இது தொடர்பான பரபரப்பு ஏற்பட்டுள்ள சூழலிலேயே பாதுகாப்பைப் பலப்படுத்தும் உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-5-இ)

## பிரதான...

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துவரும் யாழ். மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் ஏற்கனவே ஆறு பேரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். நீதிமன்ற உத்தரவின் பேரில் சந்தேகநபர்கள் நாளைமறுதினம் வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். கொல்லப்பட்ட இளைஞனின் மனைவியால், அவர்களில் இருவர் அடையாள அணிவகுப்பின் போது அடையாளம் காட்டப்பட்டிருந்தனர்.
இந்நிலையில் தொடர் விசாரணைகளை முன்னெடுத்துவரும் மாவட்டக் குற்றத் தடுப்புப் பொலிஸார் வவுனியா, ஒட்டுசுட்டான் மற்றும் கிளிநொச்சிப் பகுதிகளில் தலைமறைவாகி இருந்த பிரதான சந்தேகநபர்களில் ஒருவர் உள்ளிட்ட மூவரைக் கைது செய்துள்ளனர்.
கைது செய்யப்பட்டுள்ளவர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவரும் பொலிஸார் அவர்களை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர். அவர்களைத் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதித்துள்ளது.
அதேவேளை சந்தேகநபர்களுக்கு அடைக்கலம் கொடுத்த நபர்களுக்கு எதிராகவும் கடுமையான சட்ட நடவடிக்கையைப் பொலிஸார் முன்னெடுக்கவுள்ளனர்.
தேடப்படும் சந்தேகநபர்களுக்கு அடைக்கலம் கொடுப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். வட்டுக்கோட்டைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு அடைக்கலம் கொடுத்து பாதுகாக்கும் நபர்கள், சந்தேகநபர்கள் குறித்து அறியத்தருமாறு பொலிஸார் கோரியுள்ளனர். (அ-ஒ-26-66)

## கோத்தாவின்...

பிடிப்புகள் மற்றும் பரிந்துரைகளை இரத்துச் செய்து மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்தது.
உபாலி அபேரத்ன ஆணைக்குழு என பொதுவாக அழைக்கப்படும் அரசியல் பழிவாங்கல்களுக்கான ஜனாதிபதி ஆணைக்குழு முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவால் நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழு நல்லாட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், வழக்குகள், இடமாற்றங்கள், கைதுகள் உள்ளிட்ட பல விடயங்களை ஆராய்ந்திருந்தது. குறிப்பாக ராஜபக்சக்களின் ஆதரவாளர்கள் என்று நம்பப்படுவோரைப் பாதுகாக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்ட நகர்வாக இது விமர்சிக்கப்பட்டிருந்தது. இந்த ஆணைக்குழு வழங்கிய அறிக்கையில் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர்கள் உள்ளிட்ட பலர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.
இது தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றில் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட பலரால் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. அந்த வழக்கில் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன, நீதியரசர் எம்.டி.எம்.லபர் மற்றும் நீதியரசர் டி.எம். சமரகோன் ஆகியோர் நேற்று ஒருமனதாக அரசியல் பழிவாங்கல் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் கண்டுபிடிப்புகள் சட்ட அதிகாரத்தின் எல்லைக்கு அப்பாற்பட்டவை என்று தீர்ப்பிட்டனர். (அ-ஒ-இ)

## சி.ஐ.டி.யில்...

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு நேற்று மு.ப. 10.30 மணிக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சென்றிருந்தார். அவரிடம் சுமார் 5 மணிநேரம் வாக்குமூலம் பெறப்பட்டது.
குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதான வாயிலில் ஊடகவியலாளர்கள் திரண்டிருந்த நிலையில், பின்வழியூடாக மைத்திரிபால சிறிசேன வெளியேறினார்.
நீதிமன்றம் உத்தரவிட்டால் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் சூத்திரதாரிகளை வெளிப்படுத்துவேன் என்றும் தனக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் எனவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார். அவரது இந்தக் கருத்துத் தொடர்பில் பல தரப்புகளும் குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தில் முறைப்பாடு செய்திருந்தன. இதற்கு அமைவாக அவரிடம் நேற்று விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. (அ-ஒ-44)

## விபத்தை...

அடைந்தார். பருத்தித்துறையிலிருந்து துன்னாலை நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை பின்னால் வேக மாக வந்த ஹைஏஸ் வாகனம் மோதிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.
இவ் விபத்து தொடர்பில் பருத்தித்துறைப் போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ஒ-100)

## பெரிய...

தெரிவித்துள்ளார். பண்டிகைக் காலத்தில் பெரிய வெங்காயத்தின் விலையை ரூ. 375 முதல் ரூ. 400 ரூபாவுக்குள் பெற்றுக்கொடுக்க எதிர்பார்ப்பதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டி, கல்லூரி மைதானத்தில் அதிபர் எஸ்.பேரின்பநாதன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாக தென்மராட்சிக் கல்வி வலயக் கணக்காளர் திருமதி எஸ்.சுதர்சினி, பழைய மாணவி எலிசா பாக்கியதேவிமன், தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக்கல்வி ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் ஏ.மனோரஞ்சிதன், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-159)

# ஹோக்லி அதிரடி ஆர்.சி.பி. வெற்றி



பஞ்சாப் அணியை 4 இலக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி நடப்பு ஐ.பி.எல். தொடரில் முதலாவது வெற்றியைப் பதிவு செய்தது பெங்களூர் ரோயல் சலஞ்ஸ்.

ஐ.பி.எல். தொடரின் 6 ஆவது ஆட்டம் நேற்று நடைபெற்றது. தனது சொந்த மைதானத்தில் ஆடிய பெங்களூர் அணி நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று களத்தடுப்பை தேர்வு செய்தது.

முதலில் ஆடிய பஞ்சாப் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. அணித் தலைவர் தவான் 37 பந்துகளில் 45 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். அந்த அணியின் பின்வரிசை வீரர் சக்சக் சிங் அதிரடியாக ஆடி 8 பந்துகளில் 21 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்து வீச்சில் சிராஜ், மக்ஸ்வெல் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலளித்து ஆடிய பெங்களூர் அணிக்கு ஹோக்லி சிறப்பான அடித்தளத்தை அமைத்தார். ஒரு முனையில் ஹோக்லி அடித்தாடினாலும் மறுமுனையில் இலக்குகள் சரிக்கப்பட்டுக்கொண்டிருந்தன. 49 பந்துகளில் 77 ஓட்டங்களுடன் ஹோக்லி ஆட்டமிழந்தாலும் இறுதியில் டினேஸ் கார்த்திக் அதிரடியாக ஆடி 10 பந்துகளில் 28 ஓட்டங்களைக் குவித்து அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார். 4 பந்துகள் மீதமிருக்க 6 இலக்குகளை இழந்து வெற்றியிலக்கை பெங்களூர் அடைந்தது. (ஒ-5)

# எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தாக்குதல்

முல்லைத்தீவு, மார்ச் 26

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குள் காரில் சென்ற நால்வர் அங்கு நின்றவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமாலை நடைபெற்றுள்ளது. காரில் சென்ற நான்கு பேர் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குள் சென்று, எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர் ஒருவர் மீது தாக்குதல் நடத்த முயன்றுள்ளனர். இதனைத் தடுக்கச் சென்றவர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-19)



# கம்பரின் நினைவு தினம்

வவுனியா, மார்ச் 26

வவுனியா நகரசபையின் ஒழுங்கமைப்பில், கவிச்சக்கரவர்த்தி கம்பரின் நினைவுதினம் வவுனியாவில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்றது.

இதன்போது கம்பனின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் இலக்கியச் சுடர் ஐ.கதிர்காமசேகரம் மற்றும் கபிலநாத் அட்சகி ஆகியோரின் சிறப்புரைகளும் ஆற்றப்பட்டன.

நிகழ்வில் சமூக ஆர்வலர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-110)

இலங்கை சதுரங்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில், கிளிநொச்சி மாவட்ட சதுரங்கச் சங்கத்தின் ஒழுங்குபடுத்தலில், தேசிய இளைஞர் 'மித வேக மின்னல் வேக' சதுரங்க போட்டிக்கு போட்டியாளர்களை தெரிவு செய்வதற்காக 8,10,12,14 வயதுப்பிரிவினருக்கான ஆரம்பக்கட்ட போட்டிகள் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றன. (எ-113)






பாடசாலைகளுக்கிடையிலான அகில இலங்கை தேசிய மல்யுத்தப் போட்டியில் 4 இடங்களைப் பெற்று, வடக்கின் அதிக பதக்கங்களை பெற்ற முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரியின் வீரர்களை கௌரவப்படுத்தும் நோக்கில், பாடசாலை முன் அரங்கில் மாணவர்களின் பதாகை நிறுவப்பட்டு, கடந்தவாரம் திரை நீக்கம் செய்யப்பட்டது. (எ-13)

விற்பனைக்கு
புதிய Wheel Chair விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 076 159 6912

காணி விற்பனைக்கு
இருபாலை கிழக்கு மடத்தடி இலந்தையடி
வைரவர் கோயிலுக்கு முன்பாக
18 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(மின்சார வசதியுண்டு)
077 959 6150

வேலையாள் தேவை
தெல்லிப்பளையில் வசிக்கும்
வயோதிபப் பெண்ணை
பராமரிப்பதற்கு பெண்
வேலையாள் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
075 2487177



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.